அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 21/90

அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 7.
1990, மார்ச்சு மாதம் 30 ஆந் திகதி.

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்க கூட்டுத்தாபனத் தலைவர்கள்.

## சமாதான மிதி வண்டி போட்டி – 1990

1990 சிங்களத் தமிழ் புத்தாண்டுக் கொண்டாட்டங்களை முன்னிட்டு 1990.04.14ஆந் திகதி கொழும்பு காலி முகத்திடலில் ஆரம்பமாகி, 914 மைல் நீளம் வரை பயணம் செய்து 1990.04.24ஆந் திகதி மறுபடி கொழும்பு வரும் சமாதான மிதி வண்டி போட்டியொன்றினை கௌரவ விவசாய இராஜாங்க அமைச்சரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இப் போட்டிக்கு உங்கள் கீழ்வரும் நிறுவனங்களிலிருந்து

... 2

முடிந்தளவு உத்தியோகத்தர்களை/பணியாளர்களை இதில் கலந்து கொள்ளச் செய்யும் பொருட்டு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

இச்சமாதான மிதி வண்டி போட்டியின் பொருட்டு நிரந்தரமான அல்லது நிரந்தரமற்ற சகல அரசாங்க/கூட்டுத்தாபன உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் பொருட்டு 16 நாட்களுக்கு முழுச் சம்பளத்துடன் கூடிய விசேட லீவுகளை அனுமதிக்கலாம். விவசாய இராஜாங்க அமைச்சினால் அந்தந்த போட்டியாளர்களுக்கு வழங்கப்படும் கடிதங்களின்படி லீவுகள் அனுமதித்தல் வேண்டும்.

அமைதி மிதி வண்டி போட்டி தொடர்பான விபரங்கள் புதினப் பத்திரிகையில் திகதி வெளியிடப்படும்.

ஒப்பம்: பி.என்.எம். பெர்ணந்து.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு.